NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 23 February 2023

# லீ குவான் இயூ பொதுக்கொள்கைப் பள்ளிக்கு $101 மில்லியன் நன்கொடை

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் லீ குவான் இயூ பொதுக் கொள்கைப் பள்ளிக்கு, லோ டக் குவோங் அறநிறுவனம் $101 மில்லியன் நன்கொடை வழங்கியுள்ளது.

பள்ளி இதுவரை பெற்றதில் ஆகப் பெரிய அளவிலான நன்கொடை இது. ஆசியாவைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகளின் தலைமைத்துவக் கல்வித் திட்டங்களுக்கும் இந்த வட்டார மாணவர்களுக்கு கல்வி உபகாரச் சம்பளம் வழங்குவதற்கும் இந்தத் தொகை பயன்படுத்தப்படும்.

சிங்கப்பூரில் பிறந்து இந்தோனீசியாவில் நிலக்கரிச் சுரங்க நிறுவனம் நடத்திய வணிகப் பெருந்தகையாளர் லோ டக் குவோங்கின் நினைவாக அமைக்கப்பட்டது லோ டக் குவோங் அறநிறுவனம். அது வழங்கிய நன்கொடை இந்தக் கல்வி ஆண்டில் இருந்து மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கப் பயன்படுத்தப்படும்.

பொதுக் கொள்கை, பொது நிர்வாகம், அனைத்துலக விவகாரங்கள் ஆகிய பிரிவுகளில் முதுநிலைப் பட்டக் கல்வி மேற்கொள்ளும் மாணவர்கள் இதற்குத் தகுதி பெறுவர். கல்வித் தேர்ச்சி அடிப்படையில் உபகாரச் சம்பளத்திற்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.